00098

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவிடயல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் V
இறுதிப் பரீட்சை- 2017/2018
**LLU5712/LWU3315 – பகிரங்க சர்வதேச சட்டம்**
காலம்- 03 மணித்தியாலங்கள்

திகதி: 03.03.2020 காலம்: ~~மு.ப.9.30~~ – பி.ப.~~12.30~~
1.30 – 4.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 8
ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. ரொபோ மற்றும் கொகோ ஆகியோர் முறையே ரொமேகா மற்றும் கலோகா நாடுகளின் பிரஜைகள் ஆவர். அவர்கள், கலோகாவில் இருந்து கவுலியாவிற்கு சட்ட விரோத போதைவஸ்துக்களை கடத்தல் மற்றும் கொள்ளையடித்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். கவுலியாவின் இரகசிய சேவை முகவர் ஒருவர் கலோகாவில் ரொபோ மற்றும் கொகோவை தொடர்பு கொள்வதுடன் அவர்களை புதிய வியாபார ஒப்பந்தம் ஒன்று ஏற்பாடு செய்வதற்காக கொங்பிங் நாட்டிற்கு வரவழைக்கிறார். அவர்கள் கொங்பிங்கின் பிரபல தொழிலதிபர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு அழைக்கப்படுகின்றனர். கொண்டாட்டத்தில் இருக்கின்ற போது அவர்கள் கொங்பிங் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். கவுலியாவின் அரசாங்கம் அவர்களை கவுலியாவிடம் மீள் ஒப்படைக்கப்படுமாறு வேண்டியது.

இவற்றிற்கிடையில் ரொபோவும் கொகோவும், போதைவஸ்துகளை கடத்துவதற்கான சூழ்ச்சி கொங்பிங்கின் எல்லைக்கு வெளியே ஏற்படுத்தப்படுத்தப்பட்டதாலும், அதிகாரசபைகளுக்கு அவர்களைத் தடுத்து, கவுலியாவிற்கு மீள் ஒப்படைப்பதற்கு நியாயாதிக்கம் அளிக்கும் எந்த குற்றமும் கொங்பிங்கில் இடம்பெறவில்லை என்பதாலும் கொங்பிங்கில் தம்மை தடுத்து வைத்துள்ளமையானது சட்ட விரோதமானது என வாதிட்டனர்.

மேலுள்ள சந்தர்ப்பத்தில் இருந்து எழும் பொருத்தமான சட்ட பிணக்குகளை ஆராய்க.

உமது விடையை பொருத்தமான உதாரணங்கள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள் )

2. "ஒரு நாட்டின் பரப்பு ஆக்கிரமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பலப்பிரயோகத்தை அனுமதிக்கும் ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் உறுப்புரை 51 ஆனது, ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் உறுப்புரை 2(4) இன் கீழான பலப்பிரயோகத் தடைக்கான ஒரே விதிவிலக்கு ஆகும்."

இது சமகால சர்வதேச சட்டத்தின் சரியான மதிப்பீடு ஆகுமா?
பொருத்தமான பொருத்தணைகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவற்றை எடுத்துக் காட்டி ஆராய்க.

(20 புள்ளிகள் )

3. " இனம் காணல் அல்லது இனம் காணலை நிறுத்தல் என்பன, புதிய அரசு அல்லது அரசாங்கம் அல்லது ஒரு பரப்பின் மாற்றம் என்பவற்றின் அங்கீகாரம் அல்லது அங்கீகார மறுப்பு என்பவற்றை வெளிப்படுத்துவதற்கான ஒரு அரசியல் கருவியாக, அதிகளவு பயன்படுத்தப்படுகின்றது. ஒரு புதிய அரசு அல்லது அரசாங்கத்தின் சார்பில் வெளிப்படுத்தப்படும் அவற்றின் சட்டத் தன்மை மற்றும் இனம் காணலின் விளைவுகள் பற்றிய கருத்துக்கள், தெளிவற்றத்தன்மை அற்றது அல்ல என்பதுடன் சர்வதேச சட்டக் கோட்பாடு ஆனது குறித்த மத்திய பிணக்குகளால் பிரிவுற்றுள்ளது."

M.Sorensen *Manual of Public International Law*(ed.), (London;Macmillan,1988),at p.27

மேலுள்ள துணிபுரையுடன் நீர் இணங்குகிறீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.
உமது விடையை அண்மைய உதாரணங்கள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றுடன் ஆதாரப்படுத்துமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

(20 புள்ளிகள் )

4. "சர்வதேச சட்டம் ஆனது உள்நாட்டு நீதிமன்றங்களின் முன்னிலையில் குறித்த அந்தஸ்தை அனுபவிக்கும் அதேவேளை, இது, ஏற்றுக்கொள்ளலின் மீது, சகல சர்வதேச விதிகளும் தொடர்புடைய நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தின் பாகமாக தானாக ஆகுவதாகப் பொருட்படாது. இதற்கான ஒரு காரணம், பாரம்பரிய வகைப்படுத்தலில் சர்வதேச சட்டம் ஆனது பிரதானமாக பொருத்தணை விதிகள், மற்றும் வழக்காற்று விதிகள் என்பனவற்றுடன் சட்டத்தின் பொது விதிகள் என்பனவற்றைக் கொண்டுள்ளதே அன்றி, அது ஒரு தனி சட்ட அமைப்பு அல்ல என்பதாகும்."

A.Abass, *International Law Text, Cases, and Materials*,(2ed.) Oxford University Press 2014, at p.315

உள்நாட்டுச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம் என்பனவற்றிற்கிடையிலான உறவு மீதான பொருத்தமான சட்ட வழக்கங்கள் மற்றும் கொள்கைகள் என்பன மீது கவனம் செலுத்தி மேலுள்ளக் கூற்றை நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள் )

5. “அரச விடுபாட்டுரிமை எனும் கருத்தேற்பு ஆனது, வர்த்தக உறவுகளின் விருத்தியின் காரணமாக கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உணர்வைத் தூண்டக் கூடிய விடயங்கள் (உதாரணமாக, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்) தொடர்பில் நாடுகளின் அண்மைய நடத்தையை கருத்திற் கொண்டு, இக்கருத்தேற்பு மேலும் வரையறுக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.”

மேலுள்ளக் கூற்றை, அரச விடுபாட்டுரிமை எனும் கருத்தேற்பு அரசுகளுள் மக்களின் உரிமைகள் மீது எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதன் மீது குறித்த முக்கியத்துவம் செலுத்தி நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள் )

6. “ஆசிரியர்களிற்கான உலக கூட்டமைப்பு” என்பதன் சர்வதேச சங்கம், “அடிப்படைக் கல்வித் தொடர்பான தகுதிகளை இனம் காணல்” மீதான குறித்த கொள்கைகளைத் தொகுப்பதற்காக சமவாயம் ஒன்றை வரைந்துள்ளது. இச்சமவாயம் தற்போது ஏற்று அங்கீகரிக்க தயாராக உள்ளதுடன், இச்சமவாயத்தை ஏற்பதற்காக பங்குபற்றிய 51 நாடுகளும், இதனை ஏற்று அங்கீகரிக்கும் செயன் முறையில் உள்ளன. இவ் இராஜதந்திர மாநாட்டில் பங்குபற்றாத மைசூர் எனும் நாடு, இச் சமவாயத்தை ஏற்று, இவ் ஆவணத்தில் கைசாத்திட கருதுகின்ற போதும் “கல்வித்தரம் மற்றும் நாடுகளின் வருடாந்த தரவரிசை” (இச்சமவாயத்தின் உறுப்புரை 8(a)) தொடர்பான உறுப்புரைகளை விரும்பாததுடன் சமவாயத்தின் உறுப்புரை 8(a) எவ்வித பிணிக்கும் விளைவையும் செலுத்தக் கூடாது எனும் நிபந்தனையின் மீது கையெழுத்திடத் தீர்மானிக்கிறது. பசியானா எனும் நாடு மைசூரால் எடுக்கப்பட்டுள்ள இம் முடிவை எதிர்க்கிறது. மைசூரிடம் இருந்து பாரிய வெளிநாட்டு உதவியை பெறும் விருத்தியடைந்து வரும் நாடான செலின், மைசூரின் நிலையை ஏற்கிறது. போலர் எனும் மற்றுமொரு விருத்தியடைந்து வரும் நாடும் உறுப்புரை 8(a) ஆனது போலர் மற்றும் மைசூர் ஆகிய நாடுகளுக்கு இடையில் எவ்விதத்திலும் பிரயோகிக்கப்படாது என்ற நிபந்தனையின் மீது மைசூரின் நிலையை ஏற்கிறது. சமவாயத்தின் உறுப்புரை 19 ஆனது, ஏதேனும் நாடு, சமவாயத்தை ஏற்று அங்கீகரிக்கும் போது அல்லது பின்னாளில், அப்பொருத்தணையின் ஏதேனும் உறுப்புரைகளது பிரயோகம் தொடர்பில் விளக்கங்கள் அல்லது மாற்றங்களை முன்வைக்க அனுமதிக்கிறது.

தொடர்புடைய நாடுகளில் மேற்குறிப்பிட்ட சமவாயத்தின் பிரயோக விளைவை ஆராய்ந்து கட்டுரை ஒன்றை எழுதுக.

உமது விடையானது 1969ஆம் ஆண்டின் பொருத்தணைகள் மீதான வியன்னா சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான நாட்டின் கடப்பாடுகள் குறித்து நோக்க வேண்டும்.

(20 புள்ளிகள் )

7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் (02) மீது மதிப்பீட்டுக் குறிப்புகள் எழுதுக:

(அ). சர்வதேச சட்டத்தின் அடிப்படைத் தோற்றுவாயாக நாகரிகமடைந்த நாடுகளில் இனம் காணப்பட்டுள்ள சட்டத்தின் பொதுக் கொள்கைகளின் பிரயோகம்.

(ஆ). நிலப்பரப்பை கையகப்படுத்துவதற்கான பொதுவான முறைகளும் சமகால சர்வதேச சட்டத்தில் அவற்றின் முக்கியத்துவமும்.

(இ). 1961 ஆம் ஆண்டின் இராஜதந்திர உறவுகளின் மீதான வியன்னா சமவாயத்தின் உறுப்புரை 27 இன் பிரகாரம் இராஜதந்திர தொடர்பாடல் தொடர்புடைய சட்டம்.

**(10 x 2 = 20** புள்ளிகள் **)**

8. 2019 இல் சர்வதேச நீதிமன்றம் (ICJ) தனது 73 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியது.சர்வதேச சட்டத்தை நோக்கிய சர்வதேச நீதிமன்றின் பங்களிப்பை நினைவு கூறுமாறு, ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட "சர்வதேச சட்டம் மற்றும் நீதி என்பனவற்றுக்கான சமகால சவால்கள் மீதான உலகளாவிய மாநாட்டில்" சகபாட் நாட்டின் வெளிவிவகார அமைச்சர், திரு.அபிஷேக் ஷர்மா அவர்கள் விரிவுரை ஒன்று வழங்க அழைக்கப்பட்டுள்ளர். திரு.அபிஷேக் அவர்கள் தரவுகளை நோக்கி, சர்வதேச சட்டத்திற்கான சர்வதேச நீதிமன்றின் பங்களிப்பு குறித்து ஐயமுற்றுள்ளார். அவர் உமது உதவியை நாடுகிறார். ஆய்வு உதவியாளராக, சர்வதேச சட்டத்திற்கான சர்வதேச நீதிமன்றின் பங்களிப்பு, அதன் பலம், பலவீனம் மற்றும் எதிர்காலத்தில் நீதிமன்றம் எவ்வாறு அதிக செயன்முறை மிக்கதாக ஆக்கப்படலாம் என்பதன் மீதான பரிந்துரைகள் என்பன குறித்து கட்டுரை ஒன்று எழுதுக.

(20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது.